தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை

புதன்கிழமை, 1983 பிப்ரவரி 2

தை 20, துந்துபி-திருவள்ளுவர் ஆண்டு 2014

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.''

கல்வி, ஒழுக்கம், அனுபவம் முதலியவற்றால் சிறந்த பெரியாரை, அவர் மகிழும் வண்ணம் போற்றித் தம் சுற்றத்தவருள் ஒருவராகக் கொள்ளுதல், ஒருவன் பெறுவதற்கு அரிய செல்வங்கள் பலவற்றுள்ளும் அருமையானது ஆகும்.

1. வினாக்கள் விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

கோவை மாவட்டம் கொழுமம் கிராம மீனவர் சங்கத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற மனு.

*வினா எண் 101 திரு. என். பழனிவேல்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் கொழுமம் கிராமத்திலிருந்து மீனவர் சங்கத்தின் சார்பில் 5—3-1982 ஆம் நாளன்று கோரிக்கை மனுக்கள் ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், என்னென்ன கோரிக்கைகள்?

(இ) எவை எவை நிறைவேற்றப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அ, ஆ மற்றும் இ கோவை மாவட்டம் கொழுமம் கிராமத்தில் உள்ள மீனவர் சங்கத்திடமிருந்து 5-3-82 ஆம் தேதியிட்ட கோரிக்கை மனு எதுவும் கிடைக்கப் பெறவில்லை. எனினும் இச்சங்கம் தனது 9—3—82 தேதியிடப்பட்டு கோவை மண்டல மீனள ஆயக்குநருக்கு அனுப்பிய மனுவில் மீன்வளர்ச்சிக் கழக ஆளுகைக்கு உட்பட்ட அமராவதி அணையிலிருந்து பிடிக்கப்படும் மீனை தனது விற்பனை நிலையங்கள் மூலம் விற்க அனுமதி கோரியது.

ஆனால், இச்சங்கம் தேதியிடாது பின்னர் அனுப்பிய மனு ஒன்றில் மீன் விற்பனை செய்து வந்த உடுமலைப்பேட்டை மீன் அங்காடி இடிக்கப்பட்டு புதிதாக நிர்மாணிக்கப்படுகின்ற நிலையில் உள்ளதால் இச்சங்கம் தற்போது மீன் விற்பனையில் ஈடுபட இயலாது என்று தெரிவித்துள்ளது. எனவே, தற்போது, மீன் விற்பனைக்கு தேவையில்லை என்று தெரிவித்தது. எனவே சங்கத்தின் 9-3-82 தேதியிடப்பட்ட மனுவில் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

திரு. என் பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், கொழுமத்தைச் சேர்ந்த மீனவர்கள் 5-3-82 அன்று ஒரு லாரியில் நூற்றுக்கணக்கானவர்கள் வந்து இங்கே இருக்கக்கூடிய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் எம். எல். சி.யான திரு. ஜேப்பியார் அவர்களின் மூலமாக அவர்கள் அனைவரும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே சேர்ந்து தங்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொடுக்கவேண்டும் என்று அன்று சென்னையிலே ஒரு பேரணியினை நடத்தி மனுக்களைக் கொடுத்துச் சென்றார்கள். என்னிடத்திலே கூட ஒரு காப்பியினைக் கொடுத்தார்கள். நான் அதனை அன்றே சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும், அமைச்சரிடமும் கொடுத்தேன். ஆனால் அமைச்சர் அவர்கள் இப்போது அம்மாதிரி மனுக்கள் எதுவும் வரவில்லை என்று சொல்கிறார்கள். எனவே அதுபற்றி அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5-3-82 தேதியிடப் பற்ற மனு எதுவும் வரப்பெற்றதாகத் தகவல் இல்லை. இங்கே இருக்கக்கூடிய கோப்புக்களிலும் அவ்வாறு இல்லை. 9-3-82 தேதியிடப்பெற்ற மனு மட்டும்தான் வரப் பெற்றிருக்கின்றது. அந்த மனுவின் மீதுதான், அதாவது கோவை மண்டல மீனள இயக்குநருக்கு அனுப்பப்பட்ட அந்த மனுவின்மீதுதான் நடவடிக்கை எடுக்கப்படுகின்ற நிலையிலே பின்னர் ஒரு மனு வந்தது. எனவே அதன்படி நடவடிக்கை எடுக்கப்படுவது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மீனவர்கள் இங்கே கடற்கரையிலே இருக்கின்றவர்கள் மாதிரி அப்படிப்பட்டவர்கள் அல்ல என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். எனவே, அவர்களுக்கும் ஒரு சரியான பாதுகாப்பு தருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அதாவது அவர்களுக்கு வீட்டுவசதி மற்றும் இதர கோரிக்கைகளைப் பெற்றுத் தருவதில் சரியான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த வகையான பாதுகாப்பு அவர்களுக்குத் தரப்படவேண்டும் என்று விவரக் குறிப்பு இல்லை. அவற்றைத் தந்தால் அதுபற்றிப் பரிசீலிக்கலாம். இப்போது சாதாரணமாக ஆங்காங்கே உள்ள மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக உரிமம் மற்றவைகளை வழங்குவதை அரசு மேற்கொண்டிருக்கின்றது. ஆனால் சில இடங்களிலே மீனவர்கள் அல்லாதவர்கள் அப்படிப்பட்ட சங்கங்களில் இடம் பெற்றிருக்கிறார்கள். எனவே இப்போது மீனவர்கள் மட்டும்தான் கூட்டுறவுச் சங்கங்களில் ஈடுபடல் வேண்டும் என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறோம். எனவே மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உரிமம் மற்றவைகளை வழங்க வேண்டும், அவர்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2. தகவல் கோரல்

(அ) அதிகாரிகள் மாடம் காலியாக இருத்தல்

திரு. எல். இளையபெருமாள்: தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், கடந்த இரண்டு தினங்களாகவே இங்கே முக்கியமாக ஆளுநர் உரையின்மீது பல்வேறு பிரச்சினைகளைப் பற்றிப்பேசி பல்வேறு கேள்விகள் கேட்கின்றபோது அதிகாரிகள் இருக்கக்கூடிய இடத்திலே ஒரு அதிகாரி கூட வருவதில்லை என்ற நிலைமை இருக்கின்றது. நேற்று கூட மாலைப் பொழுதில்தான் அதிகாரிகள் வந்தார்கள். இன்றும் ஒரு அதிகாரிகூட வரவில்லை. அதற்கு என்ன காரணம்? அதிகாரிகள் ஸ்ட்ரைக் செய்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதிகாரிகள் வருவதும், வராததும் அரசினுடைய பொறுப்பு. இப்போது அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். எனவே இனிமேல் வருவார்கள் என்று நினைக்கிறேன்.

1. வினாக்கள்—விடைகள்—தொடர்ச்சி

உடுக்குறியிட்ட வினாக்கள்—தொடர்ச்சி.

காரங்காட்டில் இரால் வளர்ப்புப் பண்ணை அமைக்கும் திட்டம்

வினா எண் 102—திரு. ச. அங்குசாமி மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவாடானை தொகுதி காரங்காட்டில் இரால் வளர்ப்புப் பண்ணை தொடங்குவது குறித்து செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?